Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/22**

Paper 2 Reading and Writing **October/November 2018**

**1 hour 45 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய கட்டுரைகள் இந்த இணைப்பில் உள்ளன.

இந்த இணைப்பில் உன் எண்ணங்களை எப்படி எழுத வேண்டும் என்று குறித்துக் கொள்ளலாம். இந்த இணைப்பைத் தேர்வு அதிகாரி **மதிப்பிட மாட்டார்**.

This document consists of **4** printed pages.

DC (ST) 145550/3
© UCLES 2018

CAMBRIDGE International Examinations

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

### வேலைத்தளத்தில் ஆண்-பெண் சமத்துவம்

வேலைத்தளத்தில் ஆண்-பெண் வேறுபாடின்றி அனைவரும் சமமான நன்மைகளையும், வளங்களையும், வாய்ப்புகளையும் அனுபவித்தால் வேலை செய்யும் இடத்தில் பெண்கள் ஆண்களுக்குச் சமமான நிலையிலுள்ளனர் என்று கருதலாம். வேலைத்தளத்தில் ஆண்-பெண் சமத்துவத்தைப் பேணுவதில் பல நாடுகள் அண்மைக் காலத்தில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. எவ்வாறாயினும், பொதுவாக ஆண்-பெண் சமத்துவமின்மை காரணமாக ஆண்களைவிடப் பெண்கள் குறைவான ஊதியம் கொண்டவர்களாகவும், ஆண்களைப் போன்று உயர் பதவியை அடைய முடியாதவர்களாகவும், வயதான காலத்தில் பண பலமற்றவர்களாகவும் உள்ளனர்.

வங்கியொன்றில் உயர் பதவி வகிக்கும் அங்கஜன் கருத்துத் தெரிவிக்கும்போது, 'வேலைத்தளத்தில் ஆண்-பெண் வேலை செய்யும் முறை வித்தியாசமானது. பெண்களது தலைமைத்துவப் பண்பும் சிந்தனைத் திறமும் ஆண்களிலிருந்து வேறுபட்டவை. பெண்களின் தலைமை தாங்கும் ஆற்றல் மற்றவர்களுடன் இணைந்து சுமூகமாக செயல்பட உதவுகின்றது. அனைத்தையும் நுணுக்கமாகப் பார்க்கும் ஆற்றலைப் பெண்கள் சிறுவயதிலிருந்தே வளர்த்துக் கொள்வார்கள். வேலைத்தளத்தில் ஏற்படும் பல சிக்கல்களைப் பெண்கள் ஆண்களைவிட நிதானமாகத் தீர்ப்பார்கள். அத்துடன் பிறருடனான சமூகத் தொடர்புகளை மேற்கொள்வதிலே பெண்கள் சிறந்தவர்கள். இதுவே சில தொழில்களுக்குப் பெண்களே அதிகம் ஏற்றவர்களாக அமைவதற்குக் காரணமாகின்றன.' என்று கூறினார்.

தொழில் புரியும் இடத்திலுள்ள இடர்பாடுகளைப் பற்றிக் கல்லூரி ஆசிரியராக உள்ள திருமதி ரீனா கருத்துத் தெரிவிக்கும்போது 'இன்றும் பல துறைகளில் பெண்களுக்குச் சம வாய்ப்பு கிடைப்பதில்லை என்றார். எடுத்துக்காட்டாக பல நாடுகளில் பெண்கள் அரசியல் துறையில் முன்னேற்றம் அடைய முடிவதில்லை. இன்னும் பல இடங்களில் உயர் கல்வி வாய்ப்புகள் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன. அத்துடன் இராணுவம் போன்ற துறைகளில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இது பெரும்பாலான பெண்களின் உணர்வுகளைப் பாதிக்கின்றது. மேற்கூறியவை பெண்களது தாழ்வு மனப்பான்மையை வளர்ப்பதாகவும் அமையும்.' என்று கூறினார்.

தொழில் மற்றும் குடும்பம் என்பவற்றிற்கு இடையிலான சமநிலை பற்றிய ஆய்வுகள் பொதுவாகப் பெண்கள் குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதையே காட்டுகின்றன. பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்காக பெண்கள் தமது தொழிலை இடையில் நிறுத்துவது வழக்கமாக உள்ளது. இது அவர்களது தொழில் உயர்வுக்கும், அதி உயர் பதவிகளை அடைவதற்கும் தடையாக அமைகின்றது. குடும்பத்தினரின் உடல் நலம் குன்றும்போதும் அவர்கள்தான் விடுமுறை எடுத்துக் குடும்பத்தைக் கவனிக்க வேண்டி உள்ளது. இவ் விடயம் தொடர்பாக ஆண்கள் சிலரிடம் கருத்து கேட்டபோது அவர்கள், 'பெண்கள் தொழிலிலும் பார்க்க குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது உண்மைதான். ஆனால் குடும்ப நிர்வாகம் காரணமாகப் பெண்களுக்கு அதிகம் பகுதி நேர வேலைவாய்ப்பு வசதிகள் கொடுக்கப்படுகின்றன. பெண்களுக்கு வேலை புரியும் நேரத்தில் சலுகைகள் கிடைக்கின்றன. குடும்பத்திற்குத் தேவையான மொத்தப் பணவருவாயையும் ஈட்டவேண்டிய தேவை ஆண்கள் தலையில் விழுகின்றது.' என்று கூறினார்கள்.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்து விட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

### சிறுவர்கள் மத்தியில் பால் பாகுபாடு

ஆண்-பெண் சமத்துவமின்மையை நம்மை அறியாமலேயே பிள்ளைகளின் சிறுவயதிலிருந்து புகுத்துகின்றோம். பொதுவாக நாம் ஆண் பிள்ளைகளுக்கு எலக்ரானிக்ஸ், கட்டிடப்பணி போன்ற விளையாட்டுப் பொருட்களையும் பெண் பிள்ளைகளுக்கு அலங்காரம், பொம்மை, உணவு போன்ற விளையாட்டுப் பொருட்களையும் கொடுப்பது வழக்கம்.

பிள்ளைகள் விளையாடும்போது சிலவகையான சந்தர்ப்பங்களை அவர்களைச் சுற்றியிருப்போர் வழங்கத் தவறுகின்றனர். பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுப் பொருட்கள் பிற்காலத்தில் அவர்களது தொழில் தெரிவுக்கும் காரணமாக அமையலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றார்கள். உதாரணமாக பொம்மையோடு விளையாட விரும்பும் ஒரு ஆண் பிள்ளைக்கு மற்றுமொரு வயதில் கூடிய பிள்ளையோ அல்லது பெரியவர் ஒருவரோ 'அது பெண்பிள்ளைகளது விளையாட்டுப் பொருள்' என்று கூறலாம். பிற்காலத்தில் தாதியாகவோ அல்லது குழந்தை வளர்ப்பக ஊழியராகவோ அவர்கள் தொழில் புரிவதற்கு இது ஊக்கத்தைக் கொடுக்கலாம் என்பதை நாம் அவர்கள் சிறுவயதாக இருக்கும்போது எண்ணிப்பார்க்கத் தவறி விடுகின்றோம். அல்லது சுத்தியலுடன் விளையாட விரும்பும் ஒரு பெண் பிள்ளைக்கு பெரியவர் ஒருவர் அவ் உபகரணம் பெண்பிள்ளைகளுக்குப் பாதுகாப்பற்றது என்று கூறி அதனைத் தடுக்கலாம். மாறாக அவ் உபகரணத்தை எவ்வாறு பாதுகாப்பாகக் கையாளலாம் என்று அப் பெண் பிள்ளைக்குக் காட்டிக் கொடுப்பதும், அவ் விளையாட்டுப் பொருள் மீதான தன்னம்பிக்கையை ஊட்டுவதும் பிற்காலத்தில் அவர்களுக்குப் பெண்கள் எப்போதும் கற்கத் தயங்கும் துறைகளான கட்டிட நிர்மாணத்துறை, தச்சுத் தொழில் போன்றவற்றில் தொழில் புரிதலுக்கு இலகுவானதாக இருக்கும்.

எனவே ஆண்-பெண் சமத்துவத்தைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் சூழலையும் ஊக்கத்தையும் மனத் தைரியத்தையும் வளர்ந்தவர்கள் சிறுவர்களுக்குக் கொடுக்கத் தவறுகின்றனர். தாயார் சமைப்பதையே பெரும்பாலும் சிறுவர்கள் காண்பதுண்டு. இல்லத்தை அலங்கரிக்க பெற்றோர்கள் எப்போதும் பெண்பிள்ளைகளின் உதவியை நாடுவார்கள். காரில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் அதற்கு ஆண்களின் உதவியையே நாடுவார்கள். வீட்டில் திருத்த வேலைகள் எவையேனும் இருப்பின் அதையும் ஆண்கள்தான் செய்வார்கள். இவையனைத்தும் இல்லத்தில் யார் யார் என்னென்ன பொறுப்புகளை எடுப்பார்கள் என்பதை உணர்த்தும். இவையனைத்தும் ஆண்-பெண் சமத்துவத்தைப் பேணாத சமூகம், பிள்ளைகளுக்குக் கற்றுதரும் நடைமுறைகளுக்கு உதாரணங்களாகும். இத்தகையதொரு இல்லச் சூழலில் வாழும் ஒரு பிள்ளை தானும் அந் நடைமுறைசார் வழக்கத்திற்கு இயல்பாகவே உட்படும்.

சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் நாம் கொடுக்கும் விளையாட்டுப் பொருட்களும் கார்ட்டூன்களும் பால் வேறுபாட்டுடன் இருக்கின்றன. இதற்கு மாறாக நாம் ஏன் பெண் பிள்ளைக்கு கால்பந்தொன்றைக் கொடுத்தல் கூடாது? சினிமாவில் ஏன் பெரும்பாலான பெண் பாத்திரங்கள் கதை முடிவில் ஆண் பாத்திரங்களினால் காப்பாற்றப்படுவதாக அமைக்கப்படுகின்றன? ஏன் சினிமாவிலும் கார்ட்டூனிலும் அதீத பலம் பொருந்திய, பழிவாங்கும் வீரர்கள் ஆண்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர்? இக் கேள்விகள் அனைத்தும் காலம் காலமாக நமது சமூகம் சிறுவர்களுக்கு ஊட்டும் பால்நிலைப்பட்ட வேறுபாட்டை உணர்த்தி நிற்கும். சினிமாவிலும் இலக்கியத்திலும் உள்ள இப் பாரம்பரிய மரபை உடைத்தெறிவது பிற்காலத்தில் பெண்கள் சமூகத்தில் உயர் நிலையை அடைவதற்கு வழிவகுக்கும்.

© UCLES 2018

ஆண்-பெண் சமத்துவத்தைப் பேணுவது தொடர்பான அறிவைச் சிறுவர்களுக்கு வழங்குவதில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமாகும். உயர் பாடசாலையொன்றில் தலைமை ஆசிரியராகத் தொழில் புரியும் திருமதி மேகலா கருத்துத் தெரிவிக்கும்போது, ‘இலக்கியத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு நாவல்கள் சிறுகதைகள் மூலமாக இலக்கியத்தை எழுதியவரின் பால் வெளிப்படுகின்றதா என்றும், மாணவர்கள் எழுதும் சிறுகதைகளுக்கு பால் பாகுபாடற்ற பெயர்களை வழங்கிப் பார்க்கும்படியும், சில இலக்கியங்களின் பிரதான பாத்திரத்தின் பாலை மாற்றியமைத்தால்(உதாரணமாக ஸ்லீபிங் பியூட்டி ஆணாக இருந்தால்) கதை எவ்வகையில் அமையும் என சிந்திக்கும்படியும் நாம் கூறுவதுண்டு. வேலைத்தளத்தில் இயல்பான நடவடிக்கைகளுக்கூடாக ஆண்பெண் வேறுபாட்டைக்- காட்டாதிருப்பதற்கு இவ்வாறான பயிற்சிகள் உதவலாம்.’ என்று கூறினார்.

எவ்வாறாயினும் சில ஆய்வுகள் ஆண்களினதும் பெண்களினதும் மூளை வேறுபட்ட வகையில் இயங்குவதாகக் கூறுகின்றன. உடல் கூற்றியல் ரீதியிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடு ஆய்வாளர்களால் விளக்கப்படுவதுண்டு. இயல்பாகவே ஆண்கள் பெண்களைவிட வலுவாகவும் உடல் பருமனாகவும் இருக்கின்றனர். இவையும் ஆண்-பெண் சமத்துவமின்மைக்கான பிரதான காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன.

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2018